**<u>சுருக்கம்</u>**

கூட்டுறவுத் துறை – 2014–2015–க்கான மானியக் கோரிக்கை –அறிவிப்புகள் – தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையங்கள் அமைக்க – துறை ரீதியான நிர்வாக அனுமதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களுக்கு அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(சிஎன்1)துறை**

**அரசாணை (நிலை) எண். 63** **நாள். 27.04.2015**

**படிக்க :**

1 கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கடிதம் எண். 69158/2014 வேஊவ 1, நாள். 21.08.2014

2 கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) கடிதம் எண். 69158/2014 வேஊவ 1 , நாள். 13.01.2015, 16.03.2015 மற்றும் 08.04.2015

----

**<u>ஆணை :</u>**

2014–2015ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது, வியாபார நோக்குடன் வாழைத்தார்களை சீராக கனியவைக்கவும், அதன்மூலம் விவசாயிகளுக்கு ஆதாய விலை கிடைக்கும் பொருட்டு, கரூர் மாவட்டம் மகாதானபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், தேனி மாவட்டம் காமய கவுண்டன்பட்டி மற்றும் எரசக்க நாயக்கனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், கன்னியாகுமரி மாவட்டம் காரவிளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், திருச்சி மாவட்டம் உய்யக்கொண்டான் திருமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ஆக மொத்தம் 5 சங்கங்களில் தலா ரூ.35/– இலட்சம் வீதம் ரூ.175/–இலட்சம் மதிப்பீட்டில் வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தின் வழியாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள் தனது அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை அரசுக்கு தெரிவித்துள்ளார் : –

i. கரூர் மண்டலத்திலிருந்து மகாதானபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலும், தேனி மண்டலத்திலிருந்து காமய கவுண்டன்பட்டி மற்றும் எரசக்க நாயக்கனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும், கன்னியாகுமரி மண்டலத்திலிருந்து காரவிளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலும், திருச்சி மண்டலத்திலிருந்து உய்யகொண்டான் திருமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலும் வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையங்கள் அமைக்க முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளன.

ii. இச்சங்கங்களின் செயல் எல்லை மற்றும் அருகில் உள்ள பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் வாழைத்தார்களை சீப்பு, சீப்பாக நறுக்கி, சுத்தம் செய்து, பிளாஸ்டிக் டிரேகளில் வைத்து நவீன முறையில் குளிரூட்டம் செய்யவும், வாழைக்காய்களை நவீன முறையில் எத்திலீன் வாயு மூலம் பழுக்க வைத்து சந்தைப்படுத்தவும் ஏதுவாக, சங்க வளாகத்திலேயே பத்து டன் கொள்ளளவு உடைய வாழை குளிர வைத்து பழுக்க வைக்கும் நிலையத்தினை நபார்டு வங்கியின் P.O.D.F (Producers Organization Development Fund) நிதியுதவியிலிருந்து கடனாக பெற்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த குளிரூட்டும் நிலையம் இந்த பகுதியில் அமைப்பதற்கு விவசாயிகளிடமும் ஆதரவு உள்ளது.

iii. இதன் அடிப்படையில் உரிய கருத்துரு கரூர், தேனி, கன்னியாகுமரி மற்றும் திருச்சிராப்பள்ளி மண்டல இணைப்பதிவாளர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாரியாக வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையம் அமைக்க கீழ்வருமாறு நாபார்டு வங்கியிடமிருந்து கடன் பெற்று தர பிரேரணை பெறப்பட்டுள்ளது : –

| வ. எண் | மண்டலம் | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் பெயர் | | திட்ட மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கரூர் | i | மகாதானபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | ரூ.39,06,954/– |
| 2 | தேனி | i | காமய கவுண்டன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | ரூ.39,06,954/– |
| | | ii | எரசக்க நாயக்கனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | ரூ.39,06,954/– |
| 3 | கன்னியாகுமரி | i | காரவிளை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | ரூ.42,50,000/– |
| 4 | திருச்சிராப்பள்ளி | i | உய்யக் கொண்டான் திருமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | ரூ.39,06,954/– |

மேலும், 19.08.2014 நாளிட்ட நாபார்டு வங்கி கடிதத்தில், வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையம் அமைக்க நபார்டு வங்கியின் PODF திட்டத்தின்படி திட்ட மதிப்பீட்டில் 90% கடனாகவும், மீதமுள்ள 10% தொகையினை சம்மந்தப்பட்ட சங்கத்தின் சொந்த நிதியிலிருந்து ஏற்க வேண்டும் என்றும், இக்கடன் தொகையினை 7 ஆண்டுகளுக்குள் செலுத்த வேண்டும் என்றும் இதற்கு சங்கம் 11% வட்டி தொகை செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில் மேற்குறித்த சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.35/–இலட்சம் அளவிற்கு வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையம் அமைக்க உரிய அரசாணை வழங்கும்படி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

**3.** மேலே, இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில் தேனி மண்டலத்தில், காமய கவுண்டன்பட்டி மற்றும் எரசக்க நாயக்கனூர், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் வாழைத்தார், குளிரூட்டி கனிய வைக்கும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், இறுதியாக கீழ்வரும் கூட்டுறவுச் சங்கங்களில் வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையங்கள் அமைக்க வேண்டி கீழ்க்கண்டவாறு திருத்திய கருத்துருவை அனுப்பி உரிய ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்:–

| வ. எண் | மண்டலம் | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் பெயர் | திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | கரூர் | மகாதானபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | 39,06,954/- |
| 2 | கன்னியாகுமரி | காரவிளை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | 42,50,000/- |
| 3 | திருச்சிராப்பள்ளி | உய்யகொண்டான் திருமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | 39,06,954/- |
| 4 | ஈரோடு | கோபிச் செட்டிபாளையம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் | 25,03,524/- |
| 5 | திருநெல்வேலி | அம்பாசமுத்திரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் | 41,50,000/- |
| | | மொத்தம் | 1,87,17,432/- |

மேலும், மேற்குறித்த மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அமைக்கப்பட உள்ள வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையங்கள் அந்தந்த சங்கங்களின் சொந்த இடத்திலேயே அமைக்கப்பட உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

**4.** நபார்டு வங்கியால், கரூர் மண்டலத்தில், மகாதானபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் திருநெல்வேலி மண்டலத்தில் அம்பாசமுத்திரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் கடன் முன்மொழிவுகள் நபார்டு வங்கியால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்படி மண்டலங்களில் வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையங்கள் அமைக்க கடன் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், எனவே, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, ஈரோடு மற்றும் கரூர் ஆகிய 5 இடங்களில் வாழைத்தார் குளிரூட்டி கனிய வைக்கும் நிலையங்கள் அமைப்பதற்கான ஆணை வழங்கும்படி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், கீழ்க்கண்ட 5 இடங்களில் வாழைத்தார் கனியவைக்கும் நிலையம் அமைக்க துறைரீதியான நிர்வாக அனுமதியை (Administrative Sanction) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு வழங்கலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது : –

| வ. எண். | மண்டலம் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | நபார்டு வங்கியின் இறுதி திட்ட மதிப்பீடு ரூ. | நபார்டு வங்கியிடமிருந்து பெறப்பட்ட நிதியுதவி ரூ. | சங்கத்தால் மேற்கொள்ளப் படவுள்ள செலவு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி | உய்யகொண்டான் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | 48,89,261 | 43,54,400 | 5,34,861 |
| 2 | கன்னியாகுமரி | காரவிளை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | 44,86,500 | 39,91,500 | 4,95,000 |
| 3 | ஈரோடு | கோபிச் செட்டிபாளையம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் | 27,08,500/– | 23,88,100/– | 3,20,400 |
| | | மொத்தம் | 120,84,261 | 1,07,34,000/– | 13,50,261/– |
| 4 | திருநெல்வேலி | அம்பாசமுத்திரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் | 41,50,000 | நபார்டு வங்கியால் நிராகரிக்கப்பட்டது. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி ஒதுக்க தீர்மானிக்கப்பட்டது | |
| 5 | கரூர் | மகாதானபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | 48,94,823 | | |

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை – 10.
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை– 9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜி) துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
இகோ/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்